# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

(1998, மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1998, மே மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 7.75 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 40/95

## 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கணக்குகளின் கணக்காய்வு.

11. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரை, சபை நிதியத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"தேசிய லொத்தர்கள்.

14. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காகச் சபை லொத்தர்களை நடாத்தலாம்.

(2) சபையின் சார்பில், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக வேறேதேனும் ஆளினால் லொத்தர்கள் நடாத்தப்படுவதற்காக, அத்தகைய வேறு ஆளுடன் சபையானது, உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்.

(3) சபையானது, அதற்கென வழங்கப்பட்ட உரிமத்தின் மூலம், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக வேறெவரேனுமாளினால் லொத்தர்கள் நடாத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் நடாத்துப்பட்ட அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையினால் நடாத்துப்பட்ட அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் நடாத்துப்பட்ட ஒவ்வொரு லொத்தரும் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "தேசிய லொத்தர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகிறது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 14அ என்ற பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"14 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதி, நிபந்தனைகள் முதலியன.

14அ. (1) பதினான்காம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவையும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறானவையுமான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(2) பதினான்காம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமம் தொடர்பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதான கட்டணமொன்று செலுத்துப்படுதல் வேண்டும். உரிமமானது, எவ்வாளுக்கு வழங்கப்படுகிறதோ அவ்வாளினால் கட்டணமானது சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) உரிமமானது, எந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு அமைந்ததாகவுள்ளதோ அந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு உரிமம் வைத்திருப்பவர் இணங்கியொழுகத் தவறின், சபையானது 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அதனால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை இல்லாதாக்குவது அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு "சம்பந்தமாக நடாத்தப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக, "சம்பந்தமாக நடாத்தப்பட்ட அல்லது சம்பந்தமாக நடாத்தப்பட அதிகாரமளிக்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) தேசிய லொத்தரொன்றில் அளிக்கப்பட வேண்டிய பரிசுகளின் எண்ணிக்கையும் அத்தகைய ஒவ்வொரு பரிசினது பெறுமதியும் —

(அ) சபையினால் நடாத்தப்பட்ட ஒரு லொத்தரின் விடயத்தில் விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும் ;

(ஆ) 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையினால் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும் ;

(இ) 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமத்தின் நியதி, நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) ஒவ்வொரு தேசிய லொத்தரிலும் பரிசு பெற்றோர் :—

(அ) சபையினால் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையின் சார்பில் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமத்தின் நியதி, நிபந்தனைகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் —

"(அ) "ஏதேனும் தேசிய லொத்தரிலான பரிசுகளுக்கான சீட்டிழுப்புத் திகதியிலிருந்து" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேசிய லொத்தரிலான பரிசு பெற்றோரைத் தீர்மானிக்கும் திகதியிலிருந்து" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) "சபையானது, அத்தகைய பரிசை அளித்தல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "விடயத்திற்கேற்ப, சபையானது அல்லது சபையின் சார்பில் அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆள் அல்லது 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆள் அத்தகைய பரிசை அளித்தல் வேண்டும்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒவ்வொரு தேசிய லொத்தரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேசிய லொத்தரும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(1அ) சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தரொன்றில் பணமாகவுள்ள பரிசு எவரேனுமாளினால் வெல்லப்படாதவிடத்து, அத்தகைய பரிசுப் பணம், இப்பிரிவில் முரணாக எது எவ்விதமிருப்பினும், பரிசு ஒதுக்குக் கணக்கொன்றுக்கு வரவுவைக்கப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்கில் திரளும் பணங்கள், சபையினால் நடாத்தப்படும் அடுத்துப் பின்னரான தேசிய லொத்தர்களிலான பரிசுகளை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "நிரந்தரச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையின் சார்பில் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேசிய லொத்தரினதும் வரும்படிகளை, அவ்வுடன் படிக்கையின் நியதிகளின்கீழ் அத்தகைய வரும்படி களிலிருந்து அத்தகைய தேசிய லொத்தரில் அளிக்கப்பட்ட பரிசுகளின் பெறுமதியை அல்லது அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆளுக்குச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் முகாமைக் கட்டணங்களை அத்துடன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகளையும் சமாளிக்கும் நோக்கங்களுக்கு அவசியமாகவுள்ள ஒரு தொகையெனச் செயலாளரி னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொகையைக் கழித்த பின்னர், சபையானது, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினூடாகத் திரட்டுநிதியத்துக்குச் செலுத்து தல் வேண்டும்.

(4) பதினாறாம் பிரிவின்கீழ் சபையின் நிதியத்துக்கு இழுப்பிக்கப்பட்டுச் செலுத்தப்பட்ட தேசிய லொத்தரி லான எல்லாப் பரிசுகளும், சபையினால் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "நிதியாண்டு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன்மூலமும் :—

"நிதியாண்டு" என்பது, ஏதேனுமாண்டில் சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கி அவ்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி என்று பொருளாகும் ; அத்துடன்

(2) "அமைச்சர்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :

"அமைச்சர்" என்பது, நிதி என்ற விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் என்று பொருளாகும்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.